# தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2022 மீனம்—விடை (மார்—ஏப்·91) ஓர் உருபா (இதழ் எண்: 145)


# செயலலிதாவே தமிழினத்திற்கு வாய்த்த கடைசி ஆரிய எதிரி!

## வாழப்பாடியே கடைசி வீடணன்!

## இனிமேல் இத்தகையவர்களைத் தமிழர்கள் தோன்றாமல் செய்ய வேண்டும்!

## அடுத்த தேர்தல் போராட்டம் தமிழினத்தின் உரிமை போராட்டமாக முகிழ்க்க வேண்டும்!

## பாவலரேறுவின் வரலாற்றுக் கணிப்பு இது!

(இவ்வுரை இராசீவின் மறைவுக்கு முன்னர் எழுதப்பெற்றது.)

நடுத் தெருவில் விழுந்த தேங்காயை நாய்கள் உருட்டிக் கொண்டு அலைக்கழிப்பதைப் போல் இந்திய அரசாட்சி அல்லோல கல்லோலப்பட்டுக்கிடக்கிறது.

> "வலியோர் சிலர் எளியோர் தமை
> வதையே புரிகுவதா?
> மகராசர்கள் உலகாளுதல்
> நிலையாம் எனும் நினைவா?"

... இந்திய அரசியலும் இவ்வாறுதான் 'மகராசர்கள்' எனப்படும், இனத்தலைவர்களாகத் தங்களை மதிப்பிட்டுக்கொள்ளும் பார்ப்பனர்களிடமும், அவர்களின் பகடைக்காய்களாக உருட்டப்படும் 'பனியாக்கள்' என்று கூறப்பெறும் வடநாட்டு வணிகர்களிடமும் சிக்கிச் சீரழிந்து கொண்டு வருகிறது. கன்னக்கோல் எடுத்தவனெல்லாம் இன்று கட்சி தொடங்கித் தலைவன் என்று உலா வந்து கொண்டிருக்கின்றான். திரையில் நடிக்க வந்தவர்களெல்லாரும் இன்று

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

# உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்

## செய்திகள், கருத்துகள், செயற்பாடுகள்.

(துணைப் பொதுச்செயலர் பறம்பை அறிவன் அவர்களின் கருத்துகள், மடல்கள், அறிக்கைகள் முதலியன இப் பகுதியில் தொடர்ந்து வெளிவரும். தேவையான. விடத்து முதல்வர் அறிக்கைகளும், மடல்களும் அவ்வப்பொழுது இடம் பெறலாம்.)

### 1. துணைப் பொதுச் செயலர் அறிக்கை:

***உ.த.மு.க- தமிழகம்- மூன்றாவது நடுவக்குழு— தஞ்சையில் :***

தஞ்சை நகரில், கரந்தையில் உள்ள சித்தர் மடத்தில் உ.த.மு.க-தமிழக நடுவக்குழுவின் மூன்றாவது சந்திப்பு 20-04-91—21-04-91 இருநாள்கள் நடந்தது. இனிய புதிய அமைப்பு வேலைகள் திட்டமிடப் பெற்றன. சந்திப்புக்கான ஏற்பாடுகளைத் தஞ்சை, உரத்த நாடு ஆர்வலர்களும் பொறுப்பாளர்களும் கவனித்தார்கள். வரவேற்புப் பதாகைகளும், தட்டி விளம்பரங்களும் தஞ்சை மக்களைக் கவரும்படி அமைக்கப்பட்டிருந்தன. திருவாளர்கள் த. தமிழ்த் தென்றல், நாவை. இளஞ் செழியன், மணிவண்ணன், தமிழினியன் ஆகியவர் மூன் முயற்சிகள் பாராட்டிற்குரியன. தஞ்சையில் நடந்த தன்னுரிமை மாநாட்டிற்கு வந்திருந்த கழக முதல்வர் பாவலரேறு அவர்களுக்கு வரவேற்புக் கூறிப் பதாகை -விளம்பரம் செய்யப்பட்டிருந்தது.

24-4-91 அன்று பிற்பகல், உ.த.மு.க. வின் துணைப் பொதுச்செயலாளர் திரு. பறம்பை அறிவன், தமிழக-நடுவக்குழுவின் மூன்றாவது சந்திப்புக்குத் தலைமை ஏற்றார். குழுவில் கலந்து கொண்டவர்களும் கருத்துரை வழங்கியவர்களும் பின் வருமாறு : (19 பேர்).

அதியமான், பறம்பை அறிவன், த. தமிழ்த் தென்றல், வினைதீர்குன்றன், மா,செ. தமிழ்மணி, நிலா, நாவை, இளஞ்செழியன், ப. முருகவேள், தமிழ்ப்பன், அழகுஒளி, அழகுநிலவன், கோ.க, குமாரசாமி, க, கண்ணன், பழ. மணிவண்ணன், இரா. அரங்கராசன், இரா. பாண்டியன், அ. பழனிச் சாமி, சீரங்கராயன். க. அன்பரசு.

***செயலமைப்புகள் ஏழாகவும், அவற்றின் நெறியாளர்களாகவும் உறுப்பினர்களாகவும் அறிவிக்கப்பெற்ற முடிவுகள் :-***

***ஆ) தூய தமிழ் ஆய்வியக்கம் :—***

1. ஈசுவரசன் - நெறியாளர் 2. அழகுஒளி 3. வினைதீர்குன்றன் 4. சு. முத்துச்சாமி 5. தமிழபபன் 6. நாவை. இளஞ்செழியன்

***ஈ) சமநிலைக்குமுகாய முனைப்பியக்கம் :—***

1. மா. செ. தமிழ்மணி - நெறியாளர் 2. தமிழ்மாறன் 3. குமர. தன்னொளியன் 4. விழுப்பரையன் 5. இறை. பொற்கொடி 6. சோ. க. குமாரசாமி,

***ஊ) அரசியல் ஆவணக் களரி :—***

1. க. கண்ணன்-நெறியாளர் 2. பழ. மணிவண்ணன் 3. தமிழினியன்.

***ஏ) கலை வளர்ச்சி இயக்கம் :—***

1. அதியமான்-நெறியாளர் 2. அ. பழனிச்சாமி 3. ப. அறவாழி 4. இளஞ்சித்திரன்.

***ஐ) பண்பாட்டுப் பரிமாற்றச் செயலகம் :—***

1. ப. முருகவேள்-நெறியாளர் 2. பர். தூசை (மலையகம்) 3. நிலா.

***ஒ) பொதுவுடைமைப் பொருளியல் ஆய்வகம்:—***

1. தேவநேயன்-நெறியாளர் 2. அழகுஒளி 3. சீரங்கராயன்.

***ஔ) அறிவியல் அரங்கம் :—***

1. க. அன்பரசு-நெறியாளர் 2. மா. பூங்குன்றன், 3. துரை. தென்னவன் 4, தமிழ்க்கனல்.

ஈரோட்டில் உ.த.மு.க—பெரியார் மாவட்டச் சிறப்புக் கூட்டம் நடத்தி, உ.த.மு.க.—ஆர்வலர், அன்பரிடையே இன எழுச்சி உண்டாக உதவிய மானமிகு. புலவர் திரு. தி.மு. அரச மாணிக்கனார்க்கும் பாவலர் வடிவேலனார்க்கும், ஈரோடை உ.த.மு.க - மாவட்டப் பொறுப்பாளர், ஆர்வலர், அன்பர்க்கும், பாராட்டையும், வாழ்த்தையும்

(தொடர்ச்சி 12-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசியலிலும் நடித்து அதைவிடப் பணம் பெருக்கத் தொடங்கி விட்டார்கள்.

மாநில ஆட்சிகளை அப்படி இப்படி உருட்டி எடுத்துவிட்டு, அலங்கோலத் தேர்தலை நடத்த ஆள்வோர்கள் முடிவு செய்து விட்டார்கள். இந்திய மக்களுக்குத் தேர்தல் என்பதும், அவர்களுக்கு ஏற்கனவே உள்ள நூற்றுக்கணக்கான மதவிழாக்களைப் போலத்தான் கருதப் பெறுகிறது.

குடியரசாட்சியில் மக்கள் ஆட்சியறிவு பெறவில்லையானால், ஏற்படும் எந்த ஆட்சியும் முடியாட்சியை விடக் கொடுமையானதாகவே இருக்கும் என்பதற்கு இந்திய அரசின் கடந்த நாற்பதாண்டுக்கால வரலாறே அழிக்க முடியாத ஒரு சான்றாக இருக்கிறது. இந்தியா தன்னுரிமை பெற்ற பின் இங்கு அமைந்துள்ள ஆட்சிகள் அத்தனையுமே ஊழலும், கொடுங்கோன்மையும் நிறைந்தவைதாம் என்பதில் ஐயமே இல்லை. இந்திய மக்கள் விடுதலை பெற்ற மற்ற எல்லா நாட்டு மக்களையும் விடப் பிந்திய மக்களாகத்தாம் இருக்கின்றனர்.

இந்தியா அரசியலிலும் சரி, பொருளியலிலும் சரி, மற்ற நாடுகளை விட முன்னேறாமைக்குப் பல காரணங்கள் உள. அவற்றுள் முகாமையானவை-இங்குள்ள மதங்களும் சாதிகளுந்தாம், வேறு நாடுகளிலும் மதங்களும், சாதிகள் இங்கிருப்பன போல் இல்லாமற் போயினும், வேறுவகையான இன, நிற வேறுபாடுகளும் இருக்கத்தான் செய்கின்றன. ஆனாலும் அங்கு இருப்பது போல் பார்ப்பனிய மேலாளுமை இல்லை. மக்களை இந்த அளவில் மேல் கீழென்றும் உயர்வு தாழ்வென்றும் பிரிக்கின்ற வருணசிரம, சாதிப் பிரிவுகள் இல்லை. எனவேதான் இங்குள்ள உயர்நிலையிலுள்ள சிறுபான்மை மக்களைத்தவிர பிறபிற்பட்ட தாழ்த்தப்பட்ட பெரும்பான்மை மக்களுக்கு நடுவணரசு போடும் திட்டங்கள் சட்டங்கள் எதுவும் ஒரு பயனும் தருவதில்லை. இதைப்பற்றியெல்லாம் ஆட்சிக்கு வரும் எந்த அரசியல் கட்சியும் கவலைப்படுவதுமில்லை. அவ்வாறு கவலைப்படும் ஓரிரண்டு கட்சிகளையும் இங்குள்ள பார்ப்பனர்களும் முதலாளிகளும் தொடர்ந்து ஆட்சி நடத்த விடுவதும் இல்லை. அத்தகைய நடுவணரசும் மாநில அரசுகளும் விரைவில் கவிழ்க்கப் பட்டு விடுகின்றன. இது போல், இந்நாடு உரிமை பெற்றதிலிருந்து தொண்ணூறு முறைகள் மாநில அரசுகள் கவிழ்க்கப்பட்டுள்ளன. உலகெங்கும் நடைபெறாத அரசியல் கொடுமை இது.

இந்தியாவைப் • பொறுத்தவரை, இங்குள்ள வேற்றுத் தேசிய இனத்தவர்கள் எவரும் அடையாத கொடுமைகளைத் தமிழினம் மட்டுமே அடைந்து வருவதை நாம்-குறிப்பாகத் தமிழர்களாகிய நாம உணர்ந்தே ஆக வேண்டும். இந்த நிலைக்கும் பலவேறான காரணங்கள் உண்டு. இந்தியாவில் ஆரியப் பார்ப்பனர்களை மொழியாலும், இனத்தாலும், கலை, பண்பாடுகளாலும், மரபாலும், ஆட்சியமைப்பாலும், மதத்தாலும், சாதியமைப்புகளாலும் நேரடியாக எதிர்க்கின்றது தமிழ்த்தேசிய இனம் ஒன்றுதான். வேறு தேசிய இனங்கள் அனைத்தும் ஏதோ ஒருவகையிலோ பலவகையிலோ ஆரியத்துடன் இணைப்பும் பிணைப்பும் உடையதாகவே உள்ளன. எனவே ஆரிய எதிர்ப்பினை அவை எந்த ஒரு கோணத்திலும் காட்டுவதில்லை.

இந்நிலையில்தான் இங்குத் தேர்தல்கள் அடிக்கடி வருகின்றன. தேர்தலில் மாநிலக்கட்சிகள் வென்றால் அவற்றின் மேல் ஏதாவது ஒருசில காரணங்களைக் காட்டித் தில்லியில் உள்ள பார்ப்பனிய வணிக ஆட்சி அவற்றைக் கவிழ்த்து விடுவது இயல்பாகி விட்டபின் தேர்தல்கள் நடப்பதிலேயே பொருளில்லை. ஆனால் மக்களையும் பிறநாடுகளையும் ஏமாற்றி, இந்தியாவில் நடப்பது குடியரசாட்சி தான் என்று நம்ப வைப்பதற்காகவே, கோடிக் கணக்கான பொருளைச் செலவிட்டுத் தேர்தல்களை நடத்திக் கொண்டிருக்கிறது தில்லி ஆட்சி.

எஃது, எவ்வாறாயினும், தொன்று தொட்டுத் தமிழினம் பார்ப்பனியத்தாலும், இந்தியா தன்னுரிமை பெற்றபின் வட நாட்டாராலும், அரசியல், பொருளியல், குமுகவியல் முதலிய அனைத்து நிலைகளிலும் தொடர்ந்து ஏமாற்றப்பட்டே வந்திருக்கின்றது. இந்நூற்றாண்டின் இறுதிக் காலத்திலும், திராவிட மரபு என்னும் பெயரால் ம.கோ. இராமச்சந்திரனாலும், அதன்பின் அவர் பெயரைச் சொல்லித் தம்மை வலிமைப் படுத்திக் கொண்ட செயலலிதாவாலும் இன்னும் தமிழினம் ஏமாறியே வந்து கொண்டுள்ளது. இனிமேலும் இத்தகையவர்களால் தமிழினம் ஏமாறாமல் ஓரளவு விழிப்படைந்திருக்கிறது என்று கருத இடம் உண்டு. தமிழின இளைஞர்கள், தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பார்த்து, தமிழின உணர்வு பெற்று வருகிறார்கள் என்றும் ஒருவாறு கூறலாம். எனவே செயலலிதாவே தமிழினத்திற்கு வந்து வாய்த்த கடைசி ஆரிய எதிரியாக இருக்க முடியும். அதுபோல் வாழப்பாடி இராமமூர்த்தியே தமிழினத்தைக் காட்டிக் கொடுக்கும் கடைசி வீடணனாகவும் இருக்கலாம். இனிமேல் இத்தகைய பகைவர்களும் உட்பகைவர்களும் தோன்றாமல் தமிழினத்தை விழிப்படையச் செய்யும் முயற்சியைத் தமிழினநலங் கருதும் அறிஞர்களும், இளைஞர்களும் விடாமுயற்சியுடனும் ஊக்கத்துடனும் நம்பிக்கையுடனும் செய்து வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இனி, அடுத்து வரும் இந்தியத் தேர்தல்களில் தமிழினத்தவர்கள் பங்கு கொள்ளத் தேவையில்லாத படி, இங்கு தமிழக விடுதலை முயற்சிகள் காட்டுத் தீயெனக் கனன்று பரவி எதிரிகளைக் கட்டோடு முறியடித்தல் வேண்டும். அவ்வாறான நிலையில், தப்பித் தவறி இன்னொரு தேர்தலை இத்தமிழ்நாட்டிலும் நடத்துவதற்கு வடநாட்டாரும் பார்ப்பனரும் இங்குள்ள வீடணர்களும் முயற்சி செய்வார்களானால் அது, தமிழினத்தின் உரிமைப் போராட்டமாகவே முகிழ்க்க வேண்டும் என தன்மானத் தமிழர்கள் உறுதி கொள்ள வேண்டும் என்பதை அனைவரும் நெஞ்சில் நிறுத்துக.

Scanned with CamScanner

# ஈராக்கில் குருது இனமக்கள் கொன்று அழிக்கப் படுகின்றனர்!

— அரிமா வளங்கோ: பிரான்சு.

ஈராக்கில் நடந்த கொடும் போர் முடிந்து, சாக்காட்டு அமைதிக்குப்பின் அங்கு குருதுஎன்னும் சிறுபான்மை இனமக்கள் அழிக்கப் படுகின்றனர். ஈராக்கு இதைச் செய்கிறது. அமெரிக்கா உதவு-கிறது. குருது இனமக்களை ஈராக்கு அரசு கொன்ற-ழிக்கும் எல்லைப்புறங்களைச் சுற்றிலும் அமெரிக்கப் பெரும்படை இரும்பு அரண்களால் வளைத்துக் கிடக்கின்றது. தகரி (TANK) களின் மூக்கின்மேல் அமர்ந்த வண்ணம் அமெரிக்கப்படைஞர் இக் கண் கொள்ளாக் காட்சியை நேரிடையாகக் கண்டு களிக்கின்றனர். ஒவ்வொரு மூலைமுடுக்கிலும் ஊன்றிக் கவனித்து எங்காவது குருது ஏதிலிகள் தப்பிவிடா-மல் கண்காணிக்கின்றனர்! வானூர்திகள் விண்-வெளியைப் பாதுகாக்கின்றன. அவற்றை அணு-காமல் சதாமின் திருகிறக்கை ஊர்திகள் (Helicopters) உறுமியபடி சென்று முறையாகக் கொலை நடத்தி வருகின்றன, எவ்வகையான பதற்றமோ அச்சமோ அறவே கொள்ளாமல்...!

இதற்கும் மேல் வானில் வேவுகலன்கள் (Satelites) கன்னெய்க் கிணறுகளின் தீக் கங்கு-களையும்,-ஈராக்கின் எல்லையைத் தாண்டிட வெறுங் கால்களுடன் கருவி ஏதுமற்ற நிலையில் குழந்தைகளும் பெண்களும் முதியவர்களுமாக 35 இலக்கம் மக்கள் ஓடிக்கொண்டே இருக்கையில், அவர்களை நோக்கி ஈராக்கின் அரக்கப் படை வீசும் எறி குண்டுகளுள் ஏதங்களையும் ஒரே சீராகக் கவனித்து வருகின்றன. ஒரு மாதத்திற்கு முன் இதே வேவு-கலன்கள் "குவெய்த்தின் எண்ணெய் திருடிச்" சதாமை விரட்டும் காட்சியை இப்படித்தான் கவனித்தன என்பதையும் நாம் மறப்பதற்கில்லை. இட்லரை விடவும் கொடிய சதாமை நூரெம்பர்க்கை விடவும் (Nuremburg என்னும் இடத்தில் இட்-லரின் கொலைவெறிச் செயல்களின் மீது நேசநாட்டு வெற்றி அரசுகள் வழக்கு நடத்தி, தொடர்புடைய கொடியவர்களுக்கு மிகவும் கடுமையான தண்-டனையை வழங்கின என்பது வரலாறு) சிறந்த உலக அறமன்றத்தை நிறுவித் தீர்ப்பிடப் போவ-தாகவும் சிலர் கூறினர். ஒருவேளை, மறந்து விட்-டிருப்பார்களோ, இந்தச் சந்தடி சாக்கில்!

மேலிருந்து பார்த்தால் கீழுள்ளவனின் மீசை மயிரின் நுனிக்குக் கூடச் சரியாக ஊசிவைத்தாற் போல் குண்டு வீசும் திறமை இருப்பதை 2 மாதங்-களாக அமெரிக்கர் எப்படி யெப்படியெல்லாம் காட்டி மகிழ்ந்தனர்! ஏசுவுக்குச் சிலுவைத் தீர்ப்பிட்ட போன்சு-பிலாத்து போன்ற கறைபடியாத கைகளுடன்-"வெள்ளையடிக்கப்பட்ட கல்லறை போன்ற வெள்ளைமாளிகை"யின்-தலைவன் புதரன் (Bush), தொடக்கம் முதலே குருதுகளைக் கொல்-லும் நிகழ்ச்சிகளை அணு அணுவாகத் தெரிந்து தான் வைத்துள்ளான்!

ஓடிக் கொண்டிருக்கும் குருதுக் குழந்தைப் பட்டாளம் நச்சுவெடி (Napalm Bombs) களின் அடிக்கட்டைகளையும், எரிகுண்டுகளின் உதிரித் துணுக்குகளையும் வானில் தூப்பிக்கொண்டு போகின்ற-சாகின்ற காட்சி தொலைக்காட்சித்துணையால் எல்லாரும் கண்டு சுவைக்கத் தக்கதாகவே யுள்ளது! வெள்ளைமாளிகைப் புதரன் நமக்கு முன்-னால் இதையெல்லாம், கண்டுதானிருப்பான்...! இருந்தும் அசைவதாகக் காணோம்!

இல்லை... இல்லை! ஏப்பிரல் 7 ஆம் நாள் கோவிலுக்குச் சென்று போர் முடிந்த விழாவைக் கொண்டாடினான்! அவனை எஃகு அரண்கொண்ட படைவலிமை சூழ்ந்துள்ளபோது கடவுள்தான் காப்பாற்றியிருக்கிறார்! அவ்வலிமையற்றவர்களைக் கடவுள் காப்பாற்ற மாட்டாரோ, என்னவோ? நமக்கென்ன தெரியும்! இவரது அமெரிக்க மந்திரங்-களின் துணையால் செத்துக் கொண்டிருக்கும் குருது மக்களுடைய நெடிய ஓட்டப்பந்தயத்தில் அந்த ஏதுங்கெட்ட மக்களுக்கு நன்மை வந்து வாய்த்து விடுமோ?

இதே புதரன்தான் தலையிலடித்துச்சொன்னார், "ஈராக்கின் திருகிறக்கை ஊர்திகள் எக்காலத்திலும் ஈராக்கின் சிறுபான்மை மக்களைப் பலி வாங்குவ-தற்குவிட்டு விட மாட்டோம்!" என்று! இப்போது வெட்கப்படுகிறாரோ, என்னவோ? அமெரிக்காவின் தலைமையில் பலநாட்டுப் படைகள் ஈராக்குடன் மோதி முறியடித்தபின்பு ஈராக்கு ஏற்றுக்கொண்டு ஒப்பமிட்ட ஏராளமான ஒப்பந்தங்கள் எல்லாம் எங்குத்தாம் போயினவோ? "ஓய்! 'புதரன் அவர்-களே! அமெரிக்கத்தலைவரே! உமக்கு நச்சு வெடிகளும் எரிகுண்டுகளும் (Phosphorus) வெற்று நீரும் காற்றுமாகத்தான் தெரிகின்றதா இப்போது? அவை வழவழப்பானவையா? கடினமானவையா? அவை வெறும் கிசுகிசுப்பு ஊட்டுவனவா அன்றி சொறிந்து கொள்ளத்தக்கனவா?" என்று கேட்க-லாம் போல் தோன்றுகின்றது!

வெந்ததைத் தின்று காலம் கழிக்கும் இப் பேருலகிற்கு இப்படிப்பட்ட அருங்காட்சி எப்-போதுமே காட்டப்பட்டதில்லை! ஓர் அழகான கூட்-

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

# இந்தியத் தமிழகத்தில் தமிழர் ஆட்சியும்- பார்ப்பனர் சூழ்ச்சியும்!

--அதியமான்

பார்ப்பனர் ஆளுமை செய்யும் இந்தியாவில், தமிழ்நாடு ஆட்சி சிக்கிக் கொண்டிருப்பதைத் தமிழக அரசியல் கட்சியினர் நன்கு அறிவர். ஆயினுங்கூட ஏன் அப்படி இந்தியப் பார்ப்பனரைத் தொழவேண்டும் என்ற உணர்ச்சியைப் பெறவில்லை. அதனாலேயே தமிழக ஆட்சி என்றும் ஆடிக்கொண்டே இருக்கிறது. இன்னும் ஆடும். தமிழ் நாட்டை 1967 முதல் திராவிட மரபினர் எனக் கூறிக்கொண்டு தி.மு.க., அ.தி.மு.க. வினரே ஆட்சிப் பொறுப்பிலிருந்தனர். இவ்வாட்சி களை வடநாட்டுப் பார்ப்பனரே ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கின்றனர், இவர்களைத் தன் வயமாக்கிட இவ்வாட்சிகளை இந்திரா என்ற பார்ப்பனத்தி கலைஞர் கருணாநிதி அவர்களின் தலைமையிலிருந்த தி.மு.க. ஆட்சியை 1976-இலும், 1980 இல் நடிகர் ம. கோ. இராமச்சந்திரன் அவர்களின் தலைமையிலான அ. தி. மு. க. ஆட்சியையும் 1988-இல் சானகி இராமச்சந்திரன் அவர்களின் தலைமையிலான அ. தி. மு. க. ஆட்சியையும் இந்திராவின் மகன் இராசீவும் கவிழ்த்து விட்டனர்.

மீண்டும் தி. மு. க. ஆட்சியை இராசீவும் சந்திரசேகரனும் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்தியாவை ஆட்சி செய்யும் பார்ப்பனர்கள், 1991-இல் கலைத்து விட்டனர். இவ்வதிர்ச்சியில் இந்தியாவை ஆட்சி செய்யும் பார்ப்பனர்களைத் தொழுது புகழத் தொடங்கினர். பார்ப்பனர்களின் விருப்பத்தை நிறைவேற்ற கலைஞர் முன் வந்தார். தன்மானக் கொள்கையில் ஊறிய கலைஞர் திருவாரூர் தேரை ஓட விட்டு விளம்பரப்படுத்திக் கொண்டார். பார்ப்பனர்களை நம்பி அவர்களுக்கு வேண்டியவற்றைச் செய்தார். ம. கோ. இரா.வும் முழுக்க முழுக்கப் பார்ப்பனர் பக்கஞ்சார்ந்து, அவர்கள் என்ன செய்யச் சொன்னார்களோ, அத்தனையையும் செய்தார். இவர் காஞ்சி காமகோடி பண்டாரத்தைத் தொழுது, தம் முடைய ஆட்சி பார்ப்பனருக்கே துணையானது எனக் காட்டிக் கொண்டார். அதனாலேயே ம. கோ. இரா. உடல் நலமில்லாக் காலத்தில் அவருக்கு அமெரிக்காவில் மருத்துவஞ் செய்து கொள்ள பல உதவிகளைச் செய்தார் இந்திராகாந்தி. என்னவோம. கோ. இரா. மீது இந்திராகாந்திக்கு பற்று இருப்பதாகவும், அவரிடம் ஆட்சி வலிமை இருப்பதாகவும் தப்படித்துப் பார்ப்பனர் பரப்பினர். அவரைக் கடவுள் இறக்க(அவதார)மென்று கூறிப் பார்ப்பன எத்தர்கள் மக்களை மயக்கினர்.

பார்ப்பனர்களின் சூழ்ச்சிகளையெல்லாம் அறிந்திருந்த கலைஞரும், பார்ப்பனருடைய ஆதரவு வேண்டும் என்பதற்காக அவர்களைச் சார்ந்து செயல்பட்டார். அவர்களை நம்பினார். பார்ப்பனர் ஒரு நாளும் தமிழர்களுக்கு நண்பர்களாக இருக்கவே மாட்டார்கள் என நன்கு அறிந்திருந்தும், அவர்களை ஓரங் கட்டவில்லை. எவ்வளவுதான் கலைஞர் பார்ப்பனர்களுக்கு வேண்டியதைச் செய்தாலும், அவர்கள் இவருடைய ஆட்சி நீடிப்பதை விரும்பவில்லை. எனவே அவர்களுடைய சூழ்ச்சித் திட்டங்கள் யாவும் வெளிப்படையாகவே தெரியத் தொடங்கின. அவர்களுடைய பல சூது நிகழ்ச்சிகள் தெரிந்ததும் கண்டித்து எச்சரிக்கை செய்தார். திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்திற்கு வேறு பெயரிடப் போராடிய இந்து முன்னணிக்குக் காயிதே மில்லத்தின் நாட்டுப்பற்றைக் காட்டி மறுத்தார்.

1989-இல் கலைஞருடைய இரண்டாம் முறை ஆட்சியைப் பார்ப்பனர் வெளிப்படையாகவே எதிர்த்துக் கவிழ்ப்பதற்கு முயன்றனர். முதற்கட்டமாக 25-3-89-இல் தமிழ்நாடு வரவு செலவுக் கணக்கறிக்கையை நிறைவேற்றவிடாதபடி எதிர்க் கட்சித் தலைவியாக இருந்த பார்ப்பனத்தி நடிகை செயலலிதா கலைஞர் கையிலிருந்த கோப்பைத் தம் கையால் பிடுங்கிக் கிழித்தார். இது ஒரு நாகரிக அரசியல் வழக்கருக்கான செயலன்று. பார்ப்பனரின் இழிந்த பண்பு. பதவிக்காகப் பார்ப்பனத்திக்கு அடிமையாக இருந்த திருநாவுக்கரசு உள்பட அ.தி. மு. க. உறுப்பினர்கள் கலைஞரைத் தாக்கினர். தமிழர்கள் பலர் பார்ப்பனியத்திற்கு அடிமையாக இருப்பதை உணர்ந்த செயலலிதா தமது பார்ப்பன அடிமைத் தொண்டர்களைத் தூண்டிக் கலைஞருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்ய ஊக்கம் கொடுத்தார். பதவிக்காகவும் தங்களிடமுள்ள கள்ளச் செல்வங்களைக் காத்துக் கொள்ளவும், பார்ப்பனர்களுக்கு அடிமைப்பணி புரிந்துவருகின்றவர்களாகிய மூப்பனார், ப. சிதம்பரம், வாழப்பாடி இராமமூர்த்தி, குமரி அனந்தன் போன்ற இனமான மற்ற இழிபிறவிகள் பார்ப்பனத்தி செயலலிதாவிற்குப் பின் சென்று, கலைஞர் ஆட்சியைக் கலைத்து விட்டுப் பார்ப்பனராட்சியைக் கொணர முயன்று வருகின்றனர்.

கலைஞரைப் பொறுத்தமட்டில் தந்தை பெரியார் முழங்கிய 'தமிழ்நாடு தமிழர்க்கே' என்பதை ஏற்றுத் தனித்தமிழ் நாட்டு ஆட்சியை மக்களிடம்

பரப்பியவர். பின் அவரை விட்டுப் பிரிந்து இந்திய தேசீய நீரோட்டத்தில் தமிழக ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்தவர். அப்பதவியைத் தக்க வைத்துக் கொள்ள காலத்திற்குக் காலம் பார்ப்பனரின் அழுத்தங்களைக் கண்டஞ்சி, அவர்களுக்கு ஏற்றார் போல நெகிழ்ந்து கொடுத்து வந்திருக்கிறார் என்பதைத் தமிழர்கள் நன்கு அறிவர். வடவர் திணித்த இந்தியை அரசியல் கண்ணோட்டத்தில் கலைஞரும் தி. மு. க.வும், அ. தி. மு. க வும் எதிர்த்தனரே தவிர தமிழ் மொழிக்கு ஒரு சிறப்பையும் செய்துவிடவில்லை. திராவிட மரபினர் எனக்கூறிக் கொண்டு தமிழகத்தை ஏறத்தாழ 24 ஆண்டுகள் ஆண்ட தி. மு. க., அ. தி. மு. க. ஆட்சி, தமிழகக் கல்லூரிகளில் தமிழைப் பயிற்று மொழியாகக் கூடக் கொண்டு வரமுடியவில்லை. கோவில்களில் சமற்கிருதத்தை நீக்கித் தமிழை வழிபாட்டு மொழியாகக் கொணர முடியவில்லை. எனவே இந்தியை எதிர்த்துக் கொண்டு ஆங்கில மொழிக்கே ஆக்கத்தைத் தேடிக் கொடுத்தனர். இன்று தமிழைப் படிக்காமலே ஆங்கில வழி படித்துப் பட்டமும் பதவியும் பெறமுடியும். தமிழகத்திற்கு இது ஓர் அவல நிலையாகும்.

ஆங்கிலவழிக் கல்வி பயிலும் சீர் மரபினர் மாணவர்களுக்குக் கல்விக் கட்டணம் தண்டப்படமாட்டாது என்று கலைஞர் அரசின் அறிவிப்பு உள்ளது. அதுமட்டுமன்று. இந்தி பேசாத மாநிலக் கல்லூரிகளில் இந்தியைப் பாட மொழியாகவோ அல்லது விருப்பப் பாடமாகவோ தேர்ந்தெடுத்தவர்களுக்குத் தமிழக அரசு உதவித் தொகை கொடுத்து, இந்தி பரவுதலை ஊக்கப்படுத்தியது கலைஞர் ஆட்சி. 'மாநிலத்தில் தன்னாட்சி, நடுவினிலே கூட்டாட்சி' என அடிக்கடி பேசி வந்த கலைஞர், ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்தபின், அச்சொல்லையே அடியோடு மறந்தார்.

9. 10. 6. 90-இல் தஞ்சையில் '*தமிழ்த் தேசியத் தன்னுரிமை மாநாடு*' ஒன்றை மாவீரன் *பழ. நெடுமாறன்* அவர்கள் நடத்தத் திட்டமிட்டு நடக்க இருந்தது. அம்மாநாட்டைப் பார்ப்பனர்களின் அழுத்தத்திற்குப் பணிந்து தடைசெய்தார் கலைஞர் அம்மாநாட்டிற்குச் சென்றிருந்த 'உலகத் தமிழின முன்னேற்றக்கழக முதல்வர் *பாவலரேறு பெருஞ்சித்திரனார்*, அவருடைய மகன் *பொழிலன், சாலை. இளந்திரையன்*, அவர் மனைவி *சாலினி*, மற்றும் தமிழர் தேசிய இயக்க மாநில இளைஞர் அமைப்பாளர் நாமக்கல் *சியாவுதீன் அகமது*, ஓய்வு பெற்ற பொறியாளர் *தண்டபாணி*, தெலுங்குதேச விடுதலை இயக்கத் தலைவர் மருத்துவர். *மித்ரா* பொதுச் செயலாளர் *சீனிவாசராவ்* ஆகியவர்களைக் கலைஞர் ஆட்சி தளை செய்தது. தமிழர் தேசிய இயக்கத் தஞ்சை மாவட்ட அமைப்பாளர் *முருகேசன்*, தஞ்சை மாவட்டச் செயலாளர் *அ. வியனரசு*, பழ. நெடுமாறனின் உதவியாளர் *அ. மூர்த்தி* (இவருக்கும் கட்சிக்கும் எவ்வகைத் தொடர்பும் கிடையாது. அவருக்கு இவர் ஓர் எழுத்தர்)• இம் மூவரையும் தேசீயப் பாதுகாப்புச் சட்டத்தில் கலைஞர் ஆட்சி சிறையில் அடைத்திருக்கிறது. பாதுகாப்புச்சட்டத்தில் வைப்பதற்கு இவர்களால் அரசுக்கு எவ்வகை இழப்பும் ஏற்படவில்லை. பார்ப்பனர்களை நிறைவு செய்வதற்காக இந் நடவடிக்கைகளைக் கலைஞர் எடுத்து முடித்தார். தமிழின உணர்வை இந் நடவடிக்கைகள் கிள்ளி எறியத் துணை நிற்கின்றன.

பஞ்சாப் மாநிலப் பாராளுமன்ற உறுப்பினர் *சிம்ரஞ்சித்சிங்மான்*, தமிழ்கம் வருகிறார் என அறிவித்த நகைமுகனைப் பிடித்துச் சிறையில் வைத்தது கலைஞர் ஆட்சி. ஒரு மாநிலப் பாராளுமன்ற உறுப்பினர் வேறுமாநிலத்திற்குள் போகக் கூடாது, வரக்கூடாது என்று எவரும் கூற இயலாது. அப்படி இருக்க அவர் வருகிறார் என்றறிவித்தற்காக அவருக்குத் தண்டனை. இச்செயல்களால் பார்ப்பனரின் சூழ்ச்சிகள் வளர்ந்து ஓங்கி இன்று நச்சுப் பயனைத் தமிழகத்திற்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. பார்ப்பனர் விருப்பத்தைக் கலைஞர் முடித்து வைத்தாலும், அவர்கள் அவருடைய ஆட்சியைக் கலைத்து விட்டுப் பார்ப்பனர் ஆட்சியைக் கொணர முயற்சிகளை விரைந்து செய்கின்றனர். எவ்வகைக் கரணியங்களும் அகப்படாத நிலையில் கூட, கலைஞர் தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகளுக்கு உதவினார், அவர்களைத் தமிழகத்திற்கு வர விடாதபடிக்குத் தடுக்கவில்லை, இது ஒருமைப்பாட்டிற்கு ஊறு விளைவிக்கும் என அடிப்படையற்ற குற்றத்தைச் சாட்டிக் கலைஞர் ஆட்சியைப் பார்ப்பனர் கூடிக் கலைத்து விட்டனர். வெளிப்படையாகவே பார்ப்பனர் கூடச் சூழ்ச்சித் திட்டம் தீட்டி செயல் பட்டுக் கொண்டிருப்பதை நாடும் அறியும்; கலைஞரும் அறிவார்.

இந்தியாவின் தலைமை அமைச்சர் வி. பி. சிங் பிற்படுத்தப் பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுககு இட ஒதுக்கீடு அறிவிப்பை வெளியிட்டார் இவ்வறிக்கை மொரார்சி தேசாய் தலைமை அமைச்சராக இருந்த போது அமைக்கப்பட்ட மண்டல் குழு அறிக்கை. இவ்வறிக்கை பல ஆண்டுகளாகப் பார்ப்பனராட்சி (நேரு குடும்பம்) யால் மூடக்கப்பட்டுக் கிடந்தது. இந்த அறிக்கையின்படி அரசு இயங்கத் தொடங்கினால், மிகுதியாக அரசு அலுவலர்களாக இருந்து வருமானத்தை நுகரும் பார்ப்பனர் ஒதுக்கீட்டின் கணக்குபபடி சிறிதே குறைக்கடபடுவர். முழுவதுமாக அரசுப்பணிகளைத் தம் வயமாக்கிக் கொண்டு வளம் பெறும் பார்ப்பனர் வயிற்றெரிச்சல்பட்டனர். தனக்காகா தாரை சூழ்ச்சியால் வீழ்த்த இயலாமல் போய்விடுமே என்று மனம் புழுங்கினர். எனவே வடநாட்டில் பார்ப்பனர்களும் மேல்சாதியினரும் கிளர்ச்சியில் இறங்கி இடஒதுக்கீட்டை வரவிடாமல்

தடுக்க மல்லுக்கு நின்றனர். இதனை இராசீவ், அத்வாணி போன்ற பார்ப்பனர் துணையாக இருந்து இயக்கினர். இதற்குத் துணையாகப் பதவி வெறியர் தேவிலாலையும், சந்திரசேகரையும் வைத்துக் கொண்டு வி. பி. சிங்கை ஆட்சியிலிருந்து அகற்றத்திட்டம் போட்டனர். வி. பி. சிங் பதவியிலிருந்தால் இராசீவின் போர் ஃபாக்சு ஊழல் வெளிப்படும், அதனால் வி. பி. சிங் ஆட்சிகூடாது, என்பது இராசீவின் எண்ணம். ஆனால் வி.பி.சிங் மக்களிடம் நன்மதிப்பைப் பெற்றிருந்தார். இதனை எப்படி வீழ்த்துவது எனச் சிந்தித்து இந்து சமயத்தைப் பயன்படுத்தத் திட்டம் போட்டுஅத்துவாணி என்ற பார்ப்பனனைத் துணைக்கு இழுத்துக் கொண்டார்.

எப்போதுமே பார்ப்பனர்கள் ஆளும் கட்சியிலேயும் எதிர்க்கட்சியிலேயும் இருந்து கொள்வார்கள். ஏனென்றால் பார்ப்பனருக்கு எதிர்ப்பு வரும் போதெல்லாம் அதைச் சமாளிக்க இவ்வகை அமைப்பே பயன்தரும். அந்த வகையில் அத்வாணியை விட்டு இந்து சமயப் பேரால் மக்களைத் திரட்ட ஏற்பாடுகளை விரைந்து செய்தார். பார்ப்பனரின் வேகத் தடையான இட ஒதுக்கீட்டுக் கொள்கை பார்ப்பனர்களுக்குப் பொது எதிரியானது. அதனால் வி.பி. சிங் அவர்களுக்குப் பொது எதிரியானார். இட ஒதுக்கீட்டைக் கொண்டுவர முனைப்பாக இருந்தவர் கலைஞர். அவரும் ஆட்சியிலிருக்கக் கூடாது, எனப் பார்ப்பனர்கள் எண்ணிச் செயல் பட்டனர். மக்களைத் திரட்ட இந்து சமயக் கடவுள் இராமனுக்குக் கோவில் கட்ட அயோத்தியில் முகமதியர் தொழுகை இடமான பாபர் பள்ளிவாசலைத் தேர்ந்தார்கள். அப்போதுதான் இந்துக்களுக்கும் முகமதியர்களுக்கும் போர் மூளும். நாட்டில் எல்லா இடங்களிலும் அமைதியற்ற போர் நடக்கும். முகமதியர்களும் இந்நாட்டினரே என்ற சிந்தனையற்ற மூடர்கள் இந்துக்கள் என்ற வெறியில் குழப்பத்தைப் பார்ப்பனர்களோடு சேர்ந்து குழப்பஞ் செய்தனர். இட ஒதுக்கீட்டுக் கொள்கையைத் தமிழ்நாட்டில் தந்தை பெரியார் விதைத்திருந்தார்கள். அதனால் தமிழகத்தில் இக்கொள்கையை எதிர்க்க ஆள் இல்லை. ஆனால் இராமன் கோவில் கட்ட எல்லா மாநில இந்துக்கள், பார்ப்பனியத்தின் சூதைப் புரிந்துகொள்ளாமல் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். தமிழ் மொழி, இன, நாட்டு மீட்புக்கு முன் வராத் தமிழர்களும இக்கிளர்ச்சியில் பங்கேற்றனர். இக்குழப்பத்தை உச்சிக்குக் கொண்டு செல்ல பார்ப்பன இயக்கங்களாகிய இந்து பரிசத், ஜன கல்யாண் (இது காஞ்சி சங்கராச்சாரியாரின் பார்ப்பனர் இயக்கம்) ஆர். எசு. எசு (காந்தியைச் சுட்டுக் கொன்ற கொலைவெறி இயக்கம்) இந்து முன்னணி அத்வாணியைத் தலைவராகக் கொண்ட பாரதீய சனதா ஆகியவை விரைந்து செயல்பட்டன. தமிழ் நாட்டிலே இருந்தும் இந்து என்ற பெயரால் எல்லாச் சாதியினரும் அயோத்தி நோக்கிப் புறப்பட்டனர். கலைஞர் இந்த அயோத்திப் பயணத்தைத் தடுத்து நிறுத்தவில்லை. எத்தனையோ அரசியல் கட்சிகளுக்குத் தடையிட்ட கலைஞர் அரசு, இதையும் தடை செய்திருந்தால் பார்ப்பனியம் வளர்ந்திருக்காது. ஆனால் அவர் அஞ்சிவிட்டார். பார்ப்பனியத்தின் வளர்ச்சி ஓங்கியது. ஒரு காலத்தில் தமிழர்களை இழிவாகப் பேசிய வடநாட்டு ஆரிய அரசர்கள் கனக, விசயர்களைவென்று அவர்களுடைய தலையில் இமயத்தின் கல்லை ஏற்றித் தமிழகம் கொணர்ந்து, கண்ணகிக்குக் கோவில் கட்டிய வீர வரலாற்றுக்குத் தமிழர்கள் இழுக்கைத் தந்துவிட்டனர். இப்போதைய பார்ப்பனர்கள் தமிழர்களுடைய தலையில் செங்கலை ஏற்றி வடநாடு கொண்டு சென்று அயோத்தியில் இராமனுக்குக் கோவில் கட்ட சூழ்ச்சியாக இழுத்துச் சென்றுவிட்டனர். செங்குட்டுவனின் மறவரலாற்றைக் கோழைத் தமிழர்கள் இழுக்குடையதாக்கிவிட்டனர்.

வட நாட்டின் பார்ப்பனர் இட ஒதுக்கீட்டு எதிர்ப்பை அயோத்தி இராமன் கோவில் கிளர்ச்சியோடு இணைத்து, இட ஒதுக்கீட்டுக்குக் கல்லறை கட்டி விட்டனர். பார்ப்பனரின் சூழ்ச்சியால்பிற்படுத்தப்பட்டவர்களின் வாழ்வில் மண் விழுந்தது. வட நாட்டில் அத்வாணிக்கு வேலை கொடுக்கப்பட்டது. தேர்ப்பயணம் தொடங்கி நாடு முழுவதும் அரசியல் கிளர்ச்சியை சமயத்தின் பெயரால் செய்தார். பார்ப்பனர் அல்லாதாருக்கு உயிரான இட ஒதுக்கீட்டை குழிதோண்டிப் புதைக்கவே, சூழ்ச்சியாக இக்கிளர்ச்சி செய்யப்படுவதைப் பிற்படுத்தப்படுபவர்களும் தாழ்த்தப்படுபவர்களும் அறியாமல் பார்ப்பனரோடு சேர்ந்து வி. பி. சிங்கை ஆட்சியிலிருந்து இறக்கிடத் துணை நின்று கேட்டைவரவழைத்துக் கொண்டனர்.

30-10-90இல் அயோத்தியிலிருக்கும் பாபர் பள்ளிவாசலை இடித்துவிட்டு அங்கு இராமன் கோவில் கட்டும் பணி தொடங்கும் என அத்வாணிப் பார்ப்பான் அறிவித்தார். வி. பி. சிங் அரசு "இந்தியா ஒரு சமயச் சார்பற்றநாடு, எனவே எம்மதத்திற்கும் அரசு பொதுவானது; ஆகவே இராமன் கோவில் பாபர் பள்ளி வாசல் சிக்கலில் அரசு தலையிடாது. இது பற்றிய வழக்கொன்று வழக்குமன்றத்திலிருப்பதால் அதன் முடிவை எதிர்பார்த்தே அரசின் செயலிருக்கும்" எனத் திட்டவட்டமாக ஞாயத்தைக் கூறியது. வழக்குமன்றத் தீர்ப்பு இராமன் கோவிலைக் கட்டக் கூறுது. ஏனென்றால் இராமன் பிறந்தஇடம் இப்போதைய அயோத்தி தான் என்பதற்கான தகுந்த சான்றுகள் இல்லை, இராமாயணமே ஒரு கற்பனைக்கதை என ஆய்வாளர்கள் கூறி வருகிறார்கள். மேலும் அயோத்தியில் பல இராமன் கோவில்கள் உள்ளன. இவற்றில் எந்த இடத்தில் இராமன் பிறந்தான் என உறுதியான சான்றுகள் எங்கேயுமில்லை. இதனைப்-

Scanned with CamScanner

புரிந்து கொண்ட பார்ப்பனர் வழக்குமன்றத் தீர்ப்பு வரும் முன் குழப்பத்தை உண்டாக்கத்துடித்தனர். நாடு முழுவதிலுமிருந்து கணக்கற்ற பணத்தைச் செலவு செய்து மக்களைத்திரட்டி அயோத்திநோக்கி வழியனுப்பினர்.

பார்ப்பனர்,எப்போதும் போர்க்களம் போகார். சூழ்ச்சி செய்து, காட்டிக்கொடுத்து, கையூட்டுக்கொடுத்து, பெண்களைக் கொடுத்து, மக்களை ஏமாற்றிக் காலங்கழிக்கும் எத்தர்கள் அவர்கள். அந்த வழியில் இராசீவ் காந்தி தமிழகத் தமிழர் ஆட்சியை வீழ்த்த செயலலிதா என்ற படநடிகைப் பார்ப்பனத்தியை அத்தொழிலுக்கு அமர்த்திக் கொண்டு செயல்பட்டார். இந்த செயலலிதா மறைந்த ம.கோ. இராவின் வைப்பாட்டி. அந்தஆள் செத்தும் கேடு செய்ய தமிழர்களுக்கு எதிராகச் செயல்பட அவரை அரசியலில் திணித்து விட்டுப் போய்விட்டார்.இராசீவைச் செயலலிதா அச்சமூட்டி-யே வந்தார். அடிக்கடி அரசியலிலிருந்து விலகுவதாகப் புளுகித்தள்ளித் தம் சாய்காலை நிலைநிறுத்திக் கொண்டவர். தமிழர்கள் இப்போது கவர்ச்சியான நடிப்பைக் கண்டுமயங்குகிறார்கள் என்பதைத் தெளிவாகத் தெரிந்தவர். அதனால் கலைஞர் ஆட்சியை ஒழித்துக்கட்ட செயலலிதாவே சரியான நடிகை என அறிந்த இராசீவ், அடிக்கடி சென்னைக்கு ஓடிவந்து தனியாக்க் கூடிப் பேசினார். இங்குள்ள செய்திகளை அறிய, தமிழ்நாட்டில் இற் திராபேராயக்கட்சித்தலைவர்களை அவர் நம்பவில்லை. ஏனென்றால் அவர்கள் தந்நலத்திற்காகப் பார்ப்பனருக்கு விடணராக இருக்கிறார்கள் என்பதைப் புரிந்தவர். அதனால்தான் இனத்தோடு இனம் சேர்த்தார். காஞ்சிப் பூசாரியையும், நடிகையையும், சந்தித்தார். கமுக்கங்களை அவர்கள் திறந்து காட்டித் தன் இனத்தைக் காக்க, கோள் சொன்னார்கள். இப்போது தமிழ் நாட்டில் சிறந்த அரசியல் வழக்கர்கள் நடிகையும் பூசாரியுந்தாம். நாடு உருப்படுமா?

முதலில் வி. பி. சிங்கைக் கவிழ்க்கவேண்டும். அதற்குத் தகுதிவாய்ந்த அநுமான்கள் தேவிலாலும், சந்திரசேகருமே என்றறிந்து அவர்களைக் கைக்குள் போட்டுக்கொண்டார்.

வடநாட்டில் குழப்பத்தை அத்துவாணியைக் கொண்டு சமயத்தின் பெயரால் இராசீவ் செய்து முடித்தார். அத்துவாணி வரலாற்றுச் சான்றாகிய பாபர் பள்ளிவாசலை இடிக்கப் புறப்பட்டார். பகுத்தறிவும் வரலாற்றறிவும் இல்லா மக்கள் அத்வாணி செய்வது ஓர் அரசியல் சூதாட்டம் என்பதை அறியாமல் அவர் கூறியபடி அயோத்தி நோக்கிப் புறப்பட்டுக் குழப்பம் செய்ய முன்வந்தனர். குறிப்பிட்ட நாளில் அயோத்தியில் மூடர்கள் குவிந்து, அரசியல் கிளர்ச்சியை சமயத்தின் பெயரில் செய்து முடித்தனர்.

இந்த இடத்தில் இன்னொன்றையும் மறந்து விடக்கூடாது.இராமர் கோவில் கட்டுவது முகாமையன்று. பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுடைய வாழ்வைக் குழிதோண்டிப் புதைத்து, மண்டல் குழு அறிக்கைக்குக் கல்லறை கட்டவே அதைச் செய்ய முயன்றனர். ஏனென்றால் மண்டல் குழு அறிக்கையை நடைமுறைப்படுத்தக் கொணர்ந்த வி. பி. சிங்கின் அரசு கவிழ்ந்த பின், இராமன் கோவில் கட்ட அத்வாணியும், பார்ப்பனத் தீக்கும்பல்களும் எவ்வகை முயற்சியும் செய்யவில்லை. அதனால் பார்ப்பனரின் சூதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இராமன் கோவில் சிக்கலை இழுத்ததே மண்டல் குழு நடவடிக்கைகளை ஒழித்துகட்டவேயாகும். ஏனென்றால் இராமன் கோவிலைக்கட்ட எந்த சமயத்தவரும் எழவில்லை. முழுக்க முழுக்கப் பார்ப்பனர் இயக்கங்களும், பாரதீய சனதா என்ற பார்ப்பன அரசியல் கட்சியுமே யாகும் பார்ப்பனர் ஆட்சி நீடிக்க இந்தியாவின் அரசியல் ஆளுமை எப்போதும் அவர்களுடைய கையில் இருந்தால்தான் அவர்களே அரசியல் வளங்களை நுகரமுடியும், இந்து சமயமும் அவர்களுடையதே. அச்சமயத்தைப் பயன்படுத்திப் பார்ப்பனரல்லாதார் ஆட்சியைக்கவிழ்த்துவிட்டனர்.

இப்படி ஒரு நிகழ்ச்சி நடக்க இருப்பதைப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தமிழ் நில இதழில் 15-12-89 -இலேயே தமது உரையில் எழுதி இருக்கிறார்கள். ஏனெனில் பார்ப்பனருடைய சூழ்ச்சி, 'சதி' சூது, கேடு, வல்லமை, வல்லாளுமை, மாந்தர்களைப் பலவாறும் அடிமைப்படுத்திவைத்தல் போன்ற பொல்லாச் செயல்களை நன்கறிந்து அதன் செயல்பாட்டின் நுணுக்கங்களைத் தெளிவாகவும், துணிச்சலாகவும் மக்களுக்கு எடுத்துரைத்து வருகிறார்கள். தமிழ் நிலம் 132-இல் எழுதி உள்ளதைச் சிந்திக்கவும். எவ்வளவு நினைத்துப் பார்க்கவேண்டும். அதில்.

**"தேசிய முன்னணி என்னும் பெயர் கொண்ட ஒரு கதம்பக்கட்சியின் ஆட்சியே, இப்போது அமைந்துள்ளது. அதில் பங்கு கொண்டுள்ள பிறக் கட்சிகளையும் அவற்றின் கொள்கை கோட்பாடுகளையும் நுண்ணியதாக ஆராய்ந்து பார்த்தால், தலை மட்டும் வேறாகவும், உடம்பு, கை, கால்கள் வேறுவேறாகவும் அமைந்த ஓர் உயிர்ப்படைப்பின் ஆட்சியாகத்தான், இப்போதைய தேசிய முன்னணியின் ஆட்சி அமைந்துள்ளதாக நாம் கருதலாம்."**

மேலும் இன்று நிகழ்ந்து முடிந்த ஆட்சிக் கவிழ்ப்பைப் பற்றித் தெளிவாகக் கூறி உள்ளதையும் உன்னிப்பாக எண்ணிப் பார்க்கவும்.

**"உலகத்திலேயே பெருத்த ஊழல் ஆட்சியான முந்தைய இந்திரா பேராயத்திற்கு, இப்பொழுது தலைமை அமைச்சராக உள்ள வி. பி. சிங்கின் தலைமையில் உள்ள சனதா**

தளத்திற்குக் கிடைத்த 141 இடங்களைவிட அதிகமாக 51 இடங்கள் கிடைத்து, அதுமிக வலிவான எதிர்க் கட்சியாக அமைந்திருப்பது ஆட்சிக்கு அவ்வளவு நல்ல எதிர்காலம் இல்லை. (வி.பி. சிங்கின் அரசைக் கவிழ்ப்பர் என்பதை முன் கூட்டியே எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.) என்று வருத்தத்துடன் குறிப்பிட வேண்டியதாக உள்ளது. அத்துடன் 88 இடங்களைப் பெற்றுள்ள பச்சை வெறிப் பார்ப்பனக் கட்சியான பாரதீய சனதா கட்சி, இன்றைய ஆளுங்கட்சிக்கு அடுத்தபடியாக உள்ளது. இன்னும் பெரும் வருத்தத்திற்குரிய சூழ்நிலையையே புலப்படுத்துவதாக உள்ளது. (பாரதீய சனதாவே வி.பி.சிங்கை கவிழ்க்கப் பயன்படப் போவதைக் காட்டுகிறார்கள்.) கொஞ்சம் வடிவப்படுத்தி விளக்கமாகச் சொல்வதானால் முன்னணி அரசுக்கு முன்னே உள்ளது கோவேறு கழுதையான இந்திரா பேராயக் கட்சி; பின்னே உள்ளதோ நாட்டுக் கழுதையான பாரதீய சனதாக்கட்சி! ஆக முன்னே போனால் கடிக்கும்; பின்னே போனால் உதைக்கும். (கடிக்கும் குணமுடையது கோவேறு கழுதை; உதைக்கும் குணமுடையது நாட்டுக் கழுதை. இப்போது வி. பி. சிங்கைக் கடித்தது, முன்னே உள்ள கழுதை. உதைத்தது பின்னே உள்ள நாட்டுக் கழுதை) என்ற நிலையே இப்பொழுது ஆட்சியில் அமர்ந்துள்ள தேசிய முன்னணியின் இக்கட்டான நிலை என்று சொன்னால் குற்றமாகி விடாது.''

தேசிய முன்னணி என்ற ஆட்சி பார்ப்பனருக்கு எதிரானது இல்லை; என்றாலும் பார்ப்பனரல்லாதாரின் நிலைகளை அறிந்த தலைவர், வி.பி. சிங் அவரை முதலில் தொலைத்துக் கட்ட இராசீவ் சூழ்ச்சித் திட்டம் போட்டு இந்து சமயத்தைப் பயன்படுத்தி ஒழித்துக் கட்டி விட்டார். ஏனெனில் வி.பி.சிங் ஆட்சி இருந்தால் பார்ப்பனரல்லாதாருக்குப் பல நன்மைகளைச் செய்து, அவர்களுடைய அடிமை வாழ்வு மீட்கப் பட்டு விடும் என்று இராசீவிற்கும், அவரைச்சார்ந்த இன்றைய குடியரசுத் தலைவர் தமிழ் நாட்டுப் பார்ப்பான் வேங்கட்ட இராமனுக்கும், பார்ப்பனத்தி செயலலிதா, அத்வானி, வாசுப்பேய் முதலானோருக்கும் அச்சம் வலுவாக இருந்தது. அதற்காகவே தான் அத்வானி முடுக்கி விடப்பட்டார்.

(தொடரும்)

## சீக்கியரின் விடுதலையுணர்வு!

தஞ்சை நலங்கிள்ளி, அமெரிக்கா.

இந்திய அரசால் வன்செயலாளர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுச் சிறை வைக்கப்பட்டிருந்த சீக்கிய இளைஞர் இருவர் எழுதிய மடலொன்று ஏறத்தாழ இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால், அமெரிக்காவில் வாழும் சீக்கியருக்கென, அமெரிக்கச் சீக்கியரால், அமெரிக்காவில் வெளியிடப்படும் ஆங்கில இதழொன்றில் அச்சிடப்பட்டிருந்தது. அம்மடலில் அச்சீக்கிய இளைஞரின் விடுதலையுணர்வு தீப்பிழம்பெனக் கனல்கின்றது. அம்மடலின் சில பகுதிகளின் தமிழாக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

"சீக்கியர் எனத் தம்மைச் சொல்லிக் கொள்ளும் சிலர், நாம் நமது சீக்கியத் தன்மையின் ஒரு பகுதியை இந்திய ஒருமைப் பாட்டுக்காகப் பலியிட்டுக் கொள்ள வேண்டுமெனச் சொல்வார்கள். நயன்மையும், உரிமையுமின்றி நாம் இந்தியக் கொடியின் கீழ் அடங்கிக் கிடக்க வேண்டும் என்றும் இவர்கள் சொல்லக் கூடும்.''

"மாநிலத் தன்னாட்சி என்று பேசுவதற்கு இனி எந்த இடமுமில்லை. மாநிலத் தன்னாட்சி என்று பேசுவது சீக்கியரைப் பிரிவு படுத்தவும், குழப்பவும், துயில்படுத்தவுமேயாகும். அந்நிலையில் தில்லியரசு நம்மை நெரித்துக் கசக்கிவிடும். "பிரிவினை", "பிரிவினை", "காலிசுத்தானம் (சீக்கியநாடு)" எனக் குரல் கொடுங்கள். இந்திய நச்சரவு நம்மை மயக்கித் தூங்க வைத்திட அனுமதியாதிருங்கள்.''

"நாங்களிருவரும் செய்யாத குற்றங்களுக்காக நாங்கள் கொல்லப்பட்டால், நீங்கள் எமது இடத்தில் நின்று நமது விடுதலைப் போராட்டத்தைத் தொடர்வீர்கள் என்ற நம்பிக்கையில், நாங்கள் சாவை மகிழ்வுடன் ஏற்றுக்கொள்வோம். நாங்கள் சாகும் போது காலிசுத்தானத்துக்கான ஒரு வேண்டுதல் எங்கள் உதடுகளில் தீட்டப்பட்டிருக்கும்.''

விடுதலையுணர்வு படைத்த இந்த வீரச் சீக்கிய இளைஞர்கள் கூறுகின்ற இக்கருத்துகள் தமிழருக்கும் பொருந்துமேயன்றோ?

## அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும் கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

## பணி குறைவு! சம்பளம் மிகுதி!

O தமிழகத்தில் சட்டப்பேரவை உறுப்பினர்கள் சம்பளம் அனைத்துப் படிகளும் சேர்ந்து மாதம் ஒன்றுக்கு உரு 2500, சட்டப் பேரவைத்தலைவர்க்கும் அமைச்சர்களுக்கும் உரு 3000, சட்டப்பேரவைத் துணைத்தலைவர், எதிர்க்கட்சித் தலைவர் அரசுக் கொறடா ஆகியோர்க்கு உரு 2700.

Scanned with CamScanner

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

டப் படுகொலை! நேர்த்தியான வெறியாட்டம்! மிக நெருக்கமான மலைப்பள்ளத்தாக்குகளில் "குன்றேறி யானைப்போர் கண்டாற் போன்ற" கிடுக்கித் தாக்குதல்! அமெரிக்கக் கடல் வீரர்கள் நின்று பார்க்கின்ற வகையில்- அவர்களின் முகங்களுக்கு முன்பு சதாமால் நடத்திக்காட்டப்படுகின்ற அரக்க நடனம்! இவர்கள்தாம் மக்களினம் நாகரிகம் கெட்டு நசிந்து விடாதிருக்க உதவும் மீட்பர்கள்! என்னே பேரிழிவு! உரோமாபுரி எரியும் போது கின்னரம் கொட்டி மகிழ்ந்த கோமாளிக் கிறுக்கன் நீரோ மன்னன்கூட இவர்களுக்கு முன்னால் பிள்ளைப் பூச்சி என்றுதான் சொல்லவேண்டும்!

அமெரிக்க-ஈராக்கிய போர் முடிந்தபின், 27-3-1991 மாலை இந்தக் கொலைக் கூத்து தொடங்கியது! முதலில் ஈராக்கின் தென்புறத்தில் ஈரானிய "சித்" மதப்பிரிவைச் சேர்ந்த மக்களின் எழுச்சியை சதாமின் படை நொறுக்கிச் சூறையாடியது. அதன் பின் குருதுகளைக் கொன்றழிக்கத் தன் கைக்கூலிப் படைகளை, முன்னறிவித்து விட்டுத்தான், சதாம் ஏவினான். அந்த நாளை நாம் மறப்பதற்கில்லை. அன்று உலகமன்றில் (U.N.O) அமெரிக்காவின் தலைமையில் உள்ள நாடுகளுக்கும் ஈராக்கிற்கும் நடந்த போரை முறைப்படி நிறுத்தப்பட்டதாக அறிவிக்கப் பேச்சு தொடங்கியது! அது 4-4 91 வரை நடந்து வெற்றியாக போர் நிறுத்தத்தை முழக்கமிட்டு அறிவித்து மகிழ்ந்தது! அதே 4-4-91-இல் சதாமின் கூலி ஏடு ஒன்றில், "இனிமேல் குருதுகளை ஊர்களிலும் சிற்றூர்களிலும் தூய்மை செய்யும் துப்புரவுப் போராட்டம் தொடங்கும்" என்று அறிவிக்கப்பட்டது. இஃதென்ன காற்றோடு போகின்ற பேச்சா? விண்வெளியில் நின்று காண்கின்ற வேவுகலன்களுக்கு (Satellites) நன்கு விளங்கும் வண்ணம் ஈராக்கின் செந்நீ வெள்ளம் அந்தத் "துப்புரவை" நன்றாகச் செய்யத் தொடங்கி விட்டது!

"துப்பரவு" என்பது அழகான சொல்! அந்த அளவு தேவைப்படவில்லை ஈராக்கியக் கழுகுகளுக்கு! குருது இனமக்கள் குடியிருக்கும் பனிபடர்ந்த மலை முகடுகளை வளைத்தாற்போல் நச்சு வெடிகளால் (Napalm) மூழ்கிடச் செய்தாலே போதும்; தப்பிப் பிழைக்க வேறு வழியே கிடையாது. இசரயேல் நாடு தந்த சில சின்னஞ்சிறு கருவிகளால் குருதுமக்கள் தற்காப்புப் போரை ஒரிரு நாளே நடத்தினர்; அமெரிக்கரும், ஐரோப்பியரும் முன்பு நடந்த ஈரான் - ஈராக்குப் போரின்போது ஈராக்குக்கு வழங்கிய ஆற்றல் மிக்க நுண்ணிய கொலைக் கருவிகளின் முன் குருதுகளால் எதிர் நிற்கவே முடியாத நிலை- அமெரிக்காவுடன் நடந்த போர் முடிந்தவுடன் நீண்ட நெடுங்காலமாகப் பல்வேறு வகையான கொடுமைகளுக்கு ஆட்பட்டு-வந்த குருது மக்களுக்கு 3 கிழமை மட்டுமே விடுதலை கிடைத்தது; கற்பனை மகிழ்ச்சி கரை புரண்டு ஓடியது குருது நகரங்களில்! டைகிரீசு ஆற்றங்கரைகளில் கட்டுச்சோறு சாப்பிடுவதைப் போன்ற கனவுகளில் மிதந்தனர்!

குருது மக்களைக் கூண்டோடு கட்டழிக்கும் வேலை தொடங்கி நாள் பல ஆகி, பல்லாயிரம் உயிர்களைக் காவு கொண்டபின், பிரான்சு முதலான நாடுகள் அமெரிக்கா வுடன் (அவர்களுக்கும் முதலாளி அவன்தான்) பேசி, உலக மன்றத்தைக் கூட்டலாமா? வெளிநாடுகளில் அத்து மீறுவது எவ்வளவு அடாத செயலோ, அதேபோல் உள் நாட்டில் சிறுபான்மையினரை அழிக்கமுற்படுவதும் என்று காரணம்காட்டி ஈராக்கைத் தண்டிக்கலாமா? தண்டிக்காமல் விட்டு, குருது மக்கள் ஓடுகின்ற வறண்ட பாறைப் பள்ளச் சரிவுகளையே உலக மன்றப் பாதுகாப்புப் பார்வைக்கு உட்பட்டதாகக் கூறி, சிதைந்த ஈராக்கு நகரங்களைக் கட்டமைக்கும் திருப்பணிகளில் சதாமுக்குத் தோள் கொடுத்து, பொன்னைக் கப்பல் கப்பலாக ஏற்றலாமா? ...... இன்ன வண்ணம் ஆராய்ந்து கொண்டேயுள்ளனர்!

தமிழீழம் இன்று சிங்களர் கையில் சிதைந்து கொண்டிருக்கையில் இதேபோல இந்தியா மற்றும் பல நாடுகளுக்கு எண்ணம் இழையோடுவதை நாம் உணராமல் இருந்து வருகிறோம்.

அமெரிக்காவைப் பொறுத்தவரையில் குருதாவது சோளக்கதிராவது! எல்லாம் தின்பதற்குரிய தீனிப்பண்டங்கள்தாம்! பணம் பெருத்த சவூதிகளுக்கும் குவெய்த்துக்கும் உதவும் பொருட்டு சதாமின் படைகளில் மூன்றில் இரண்டை அழித்தொழித்தது வரையில் அமெரிக்காவின் கொள்கை முடிவடைந்து விட்டதாம்! ஆனால் சதாமைக் கொல்வது ...கீழ் இறக்குவது அஃதெல்லாம் மேற்படியார்களுக்குள் நடந்த ஒப்பந்தத்தில் இல்லை போலும்!

குருது மக்களோ, ஈராக்கில் சிதறியோடும் ஏதிலிகள்! துருக்கியில் நசுக்கி யழிக்கப்படும் இனத்தவர்! கடைத்தரமாக ஈரானில் நடத்தப்படுகின்றனர்! கொன்றொழிக்கப்படுகின்றனர் சிறியாவில்! அரைமனத்துடன செரிக்கப் படுகின்றனர். உருசிய நாட்டில்! ஒற்றை இனம்; கற்றைத் தொல்லைகள்!

நம் தமிழர் பலநாடுகளில் படும்பாட்டை ஒப்பு நோக்கி ஆறுதல் பெறுவோமாக!

எப்படியிருந்தாலும் குருதுகளும் தமிழர்களுள் தமிழீழத்தார்போல ஒருசிலரும் உறுப்புச் சிதைவுகளுக்கும், பஞ்சப்பட்டினிச் சாவுகளுக்கும், கூட்டக்

(தொடர்ச்சி 12- ம் பக்கம்)

Scanned with CamScanner

# கலைஞருக்குப் புரியாத புதிர்!

நற்றிணை—

**'பாம்பின் கால் பாம்பறியும்'** ஆனால் பாம்பின் நஞ்சை உலகமே அறியும். நம் இனம் மற்ற இனத்தவருக்கு இன்னும் அடிமைப் பட்டு வீழ்ந்து கிடக்கிறது என்றால், இவ்வினம் விழிப்புணர்வும் தன்மான உணர்வும் அற்றதாக இருக்கின்ற நிலைகளே, அடிப்படைக் காரணங்களாக உள்ளன என்பது நமக்குத் தெரியாத தெளிவன்று; நமக்குப் புரியாத புதிரும் அன்று.

தமிழினத் தலைவர் என்று சொல்லிக் கொள்ளப் பெறுகின்ற கலைஞர் அவர்களின் ஆட்சி கலைக்கப் பட்டது என்பதும், வல்லாளுமை (ஆதிக்க) இனத்தவர்கள் நம் இனத்தை நீண்ட நெடுங்காலமாக அடிமைப் படுத்திக் கொண்டிருக்கின்ற சூழ்ச்சித் திறனே ஆகும்.

இன்று 'தமிழன்' என்று சொல்லப் பெறுகின்ற சொல்லே அவர்கள் பூணூலுக்கு இழுக்கு என்று எண்ணுகின்ற பெரிய வால்(ள்) முதல் சின்ன வால்(ள்) வரை நச்சுப் பார்ப்பன சூழ்ச்சித் திறன்கள் பெரியாரின் அடிச்சுவட்டில் வந்தவர்களுக்கும் தெரியாவா என்ன? இதைத்தான் கடந்த முப்பது ஆண்டுக்காலமாகச் செவிடன் காதில் ஊதிய சங்கென முழங்கிக் கொண்டிருக்கிறோம்.

அன்று தொலைக் காட்சியில் ஒரே ஒரு வரி 'நாட்டைத் துண்டாக்க கலைஞர் நகை முகனைத் தூது அனுப்பினார்' என்றவுடனே, அவருக்குத் தன்மான உணர்வு ஊற்றெடுத்து,

> " அநாமதேயங்களின் அவதூறு கூற்றுகளையெல்லாம் ஒளிபரப்பி எங்களை இழிவுபடுத்த முயற்சிக்கும் போக்கு தொடருமேயானால் தொலைக் காட்சி நிலையம் முன்பு மறியல் நடத்துவதைத் தவிர தமிழக மக்களுக்கு வேறு வழியேயில்லை " என்று மடல் மூலம் தெரிவித்திருக்கிறார் கலைஞர்.

அப்படியானால் இவ்வளவு காலமாகப் பொய்க் கருத்துப் பரப்பல் செய்து, தமிழக மக்களையே இழிவு படுத்திக் கொண்டிருந்த வானொலியையும், தொலைக்காட்சியையும் கலைஞர் கேட்கக் கூட, பார்க்கக் கூட நேரமின்றி அலையோ அலை என்று அலைந்து கொண்டிருந்தாரா? ஈழத்தமிழர் படுகொலைக்கு மாறாகப் பொய்யைப் பரப்பிக் கொண்டிருந்தபோது, எம் தமிழின மக்கள் கொதித்து ஆங்காங்குப் பொங்கி வெடித்தனரே! அப்போதும், எம் தமிழ் இளைஞர்கள் தொலைக்காட்சி நிலையத்தைத் தகர்க்க முயன்று தங்களையே மாய்த்துக் கொண்டனரே, அப்போதும், நம் தமிழினத் தலைவர்கள் அவர்கள் கண்களையும், காதுகளையும் மூடிக் கொண்டனரா? இல்லை, நாட்டின் தேசிய ஒருமைப் பாட்டில் ஒன்றிப் போய் மெய்மறந்திருந்தனரா?

ஒரு தனிப்பட்ட கட்சியே, தமிழினம் ஆகி விடுமா? ஆண்டாண்டுக்காலமாக, நம் இனத்தின் கீழ்த்தட்டு மக்களை இழிவு படுத்திக் கொண்டு நம் நாட்டின் நலங்களையும், வளங்களையும் அட்டைப் பூச்சிகளைப் போல் உறிஞ்சிக் கொண்டு கொழுத்துத் திரியும் வல்லாண்மைச் சாதி வெறியர்கள் நடத்தும் கொட்டம் கொஞ்சமா? நஞ்சமா?

தொலைக் காட்சியில் மட்டுமா பொய்ப் பரப்பல்கள்? நம் தமிழின மக்களின் உழைப்பில் குளிர் காய்ந்து கொண்டு, இராமாயணங்களையும், பாரதக் கதைகளையும் பேசிப் பேசிப் பாடிப் பாடி ஏமாற்றிக் கொண்டிருக்கும் எத்தர்களை இனங் கண்டு கொள்ள முடியவில்லையா? பெரியார் காலத்தினின்றே போராடி வந்த கலைஞர் இன்னும் மழுப்பி, மழுப்பிப் பேசி எந்த நாற்காலிக்கு பதவி தேடுகிறார்? அரசியல் நிலையானது என்று இன்னும் கனவு காண்கிறாரா?

தமிழினத் தலைவரே கேளுங்கள்!

ஆண்டாண்டுக் காலம் மாண்டு மடிந்தாலும் 'மக்களின் விடுதலை' என்பது உழைப்பாளிகளின் குருதியில் ஊறியது. அவர்களின் உரிமைக்கு முன்னால், உங்களின் அரசியல் மேடைகள் பூஞ்சைக் காளான்கள்!

பல்வேறு வகையிலும் அடிமைப்பட்டுக்கிடக்கும் நம் தமிழினத்தின் விழிப்புணர்வுக்கு அரசியல் நாடகங்களைத் தாலாட்டுப் பாடல்களாகப் பயன் படுத்தினால் — தமிழின மக்கள் கொதித்தெழுவது உறுதி! அவர்கள் விடுதலை உணர்வுக்கு ஒளியூட்ட வேண்டுமானால் போலி அரசியலை விட்டு விலகி, 'நாட்டைத் துண்டாக்கத் தூதனுப்பவில்லை,' என்று கூறிக் கொண்டிராமல், நம் இனத்தின் அடிமைத் தளையறுக்கத் துணிந்து எழுச்சி கொள்வதே பெருமை!

செயலலிதா, இராசீவ், வெங்கட்ராமன் போன்ற நச்சுப் பாம்புகளின் பல்லைப் பிடுங்குவதே திறமை!

அரசியலைவிட்டு விலகித் தமிழின விடுதலைக் குக் குரல் கொடுக்க வேண்டும் என்பதே கலைஞர் முன் வைக்கும் வேண்டுகோள்! வாழ்க! எம் தமிழினம்! வெல்க! எம் விடுதலைப் போராட்டம்! விரைக நம் தமிழ்நாட்டு விடுதலை!

O

Scanned with CamScanner

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூறித் தஞ்சையில் நடந்த உ.த.மு.க.-தமிழகம், நடுவக்குழு - மூன்றும் சந்திப்பின் முடிவு, மகிழ்கின்றது.

**செயலமைப்புகள் சந்திக்கும் நாள் :-** (இடம் பின்னர் அறிவிக்கப்பெறும்).

1. தூய தமிழ் ஆய்வியக்கம்: 12-5-91 ——
2. சமநிலைக் குமுகாய முனைப்பியக்கம்: 19-6-91— காஞ்சிபுரம்.
3. அரசியல் ஆவணக் களரி: 02-6-91—திருச்சி
4. கலை வளர்ச்சி இயக்கம்: 09-6-91—மதுரை
5. பண்பாட்டுப் பரிமாற்றச் செயலியக்கம்: 16-6-91— மதுரை
6. பொதுவுடைமைப் பொருளியல் ஆய்வகம்: 23-6-91— ஈரோடு
7. அறிவியல் அரங்கம்: 30-6-91— உரத்தநாடு

---

(10-ஆம் பக்கம் தொடர்ச்சி)

கொலைகளுக்கும் நன்றாகப் பழகிப் போய்விட்டனர்! இவை யாவும் 1946 முதல் குருதுகளுக்கும் 1952 முதல் தமிழீழ மக்களுக்கும் நடந்து வருகின்றன! ஒருவேளை அவர்கள் அந்தப் பாடுகளைப் படுவதற்காகத்தாம் பிறந்தவர்களோ, என்னவோ?

சுற்றிலும் உள்ள இசலாமிய நாடுகள் இதைப் பற்றி எல்லாம் எண்ணுவதுமில்லை; உதவ நினைப்பதுமில்லை. நம்மூர் மண்ணடியிலும் தே(வ)னும் பேட்டையிலும் ஊர்வலம் போட்டு, சதாமுக்கு ஆதரவும் சண்டைக்கு எதிர்ப்பும் தெரிவித்த ஒருசிலரும் செயலலிதாவின் முன்றானையைப் பிடித்துக் கொண்டு ஓரிரண்டு இடமாவது வரப்போகும் தேர்தலில் கிடைக்காதா என்று உயிருக்கு மன்றாடி வருகின்றனர்! யாருக்கும் இவை பற்றிய கவலையும் இல்லை! பொறுப்பும் இல்லை!

# தமிழ் எழுத்துகளை அழிக்கின்ற அடாத செயல்கள்!

தமிழ் நாட்டின் ஓர் எல்லையான ஒசூர் பகுதியில் அண்மைக் காலமாகத் தமிழர்களை இழிவுபடுத்தும் வகையில், தமிழ்ப் பெயர்களைக் கரிநெய்(தார்) கொண்டு அழிக்கும் சூழ்ச்சி வேலையில் தமிழினப் பகைவர்கள் சிலர் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த மாதங்களில் பாகலூர் ஒசூர் சாலையில் அமைந்துள்ள சாலையோரச் சிற்றூர்ப் பெயர்ப் பலகைகளில் உள்ள தமிழ் எழுத்துகளையெல்லாம் இரவோடு இரவாகக் கரிநெய் (தார்) பூசி அழித்துள்ளனர். ஆங்கிலத்திலும், தமிழிலும் எழுதப்பட்டு இருந்த இப்பெயர்ப் பலகைகளில் தமிழ் எழுத்துகள் மட்டுமே ஓர் எழுத்துக் கூட தெரியாத வகையில் அழிக்கப்பட்டுள்ளன.

தமிழர்கள் அதிகமாக வாழும் தொழிற்பேட்டையான பாகலூர் மற்றும் ஒசூர் பகுதியில் இதனால் தமிழர்களிடையே பதட்ட நிலை ஏற்பட்டுள்ளது. தமிழின இளைஞர்கள் மிகவும் கொதிப்படைந்துள்ளனர். அரசு அதிகாரிகளும், தமிழ்நலம் கருதும் பிறரும் இச்சிக்கலின் பால் கவனத்தைத் திருப்பித் தமிழ் எழுத்துகளை அழித்தவர்களின் மேல் நடவடிக்கை எடுப்பது மட்டுமல்லாமல், உடனடியாகத் தமிழ்ப் பெயர்ப் பலகைகளை நிறுவ வேண்டுமென எமது மன்றத்தின் சார்பாகவும், பாகலூர் - ஒசூர் வாழ் தமிழின இளைஞர்களின் சார்பாகவும் கேட்டுக் கொள்கிறோம்.

இவண்
மா. மூவேந்தன்
தலைவர்: வள்ளுவர் இலக்கிய மன்றம், ஒசூர்.

(பி. கு: தமிழக அரசுக்கு அனுப்பியுள்ள முறையீட்டின் படி.

---

**உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்!**

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், வலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

**சிந்தனைக்கு : 62**

மக்கள் நலம் கருதும் ஆட்சியை மக்கள் தாம் அமைக்க முடியும். மக்கள் எவ்வளவுக் கெவ்வளவு ஆட்சியாளர்களைப் பற்றிச் சிந்திக்காமல் இருக்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு ஆட்சியாளர்கள் மக்களைப் பற்றிச் சிந்திக்க மாட்டார்கள்?


(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண். 145

அனுப்புதல்:

**தமிழ்நிலம்**

5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண்: 847829

உறுப்பினர்:

| | |
|---|---|
| தனி இதழ் விலை | உரு. 1-00 |
| ஆண்டுக் கட்டணம் | உரு. 50-00 |
| அரையாண்டுக் கட்டணம் | உரு. 25-00 |

ஆசிரியரும், வெளியிடுபவரும்:
பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம்,
5, அருணாசலந் தெரு, சென்னை-5.



தமிழர் ஒவ்வொருவரும்
கட்டாயம் படிக்க வேண்டிய
இதழ்கள்! தமிழ்நிலம்,
தென்மொழி. தமிழ்ச்சிட்டு!